# DEPOSITION OF WITNESS

**Chapter XXIII Code of Criminal Procedure**

**In the Court of Judicial Magistrate No. II, Usilampatti.**

**Case No. S.T.C - 311/2021**

**Deposition of Witness for Prosecution : D.W.1**

| | | | |
|---|---|---|---|
| Name | : பெனிட்கரன் | Caste | : |
| Father/Husband Name | : பாலசிங் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

**(Petitioner and Accused Present )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1969 of the day of 24.02.2026.**

**குறுக்கு விசாரணை:**

1. நான் தாக்கல் செய்துள்ள எ.மா.சா.ஆ. 13 ஆவணத்தில் தேதி பேனாவில் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் எனது ஊழியர் வேல்முருகன் புகார்தாரருக்கு மேற்படி வாட்ஸ்ஆப் குறுந்தகவலை அனுப்பினார் என்பதை நான் நிருபிக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி வேல்முருகனை எனது தரப்பு சாட்சியாக விசாரிக்கமுடியுமா என்றால் முடியும். அதே போல் மேற்படி வேல்முருகன் மேற்படி குறுந்தகவலை எனது அழைப்பேசிக்கு அனுப்பியதை நான் நிருபிக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி குறுந்தகவலை அழைப்பேசியிலிருந்து கடந்த 20.09.2021 அன்று பதிவிறக்கம் செய்து நகல் எடுத்ததாகவும் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல. மேற்படி நகலை 30.10.2019 அன்று பதிவிறக்கம் செய்து நகல் எடுத்தேன். எ.மா.சா.ஆ. 14 ஆவணத்தில் 20.09.2021 அன்று நான் பதிவிறக்கம் செய்ததை எனது இ-மெயிலுக்கு அனுப்பியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 20.09.2021ம் தேதி இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு வந்த தேதி என்றால் இருக்கலாம். நான் அனுப்பிய பதில் அறிவிப்பில் மேற்படி எ.மா.சா.ஆ. 13 ஆவணத்தை பற்றி குறிப்பிடவில்லை என்றால் போதுமான ஆதாரங்கள் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன். மேற்படி எ.மா.சா.ஆ. 13 ஆவணம் வழக்கிற்காக என்னால் மோசடியாக தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. அதனால் நான் தாக்கல்

செய்துள்ள எ.மா.சா.ஆ. 13 மற்றும் எ.மா.சா.ஆ. 14 ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.